நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 19.05.2022
---------------------------

## சாத்தூர் நகர்மன்றம் அவசரக்கூட்டம் அறிவிப்பு

கூட்டம் எண். 2

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் வைகாசி 06 ஆம் நாள் 2022ம் ஆண்டு மே மாதம் 20.05.2022ம் தேதியன்று வெள்ளிக்கிழமை காலை 12.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

நகர்மன்றத் தலைவர்
சாத்தூர் நகராட்சி.

பொருள் எண்: 1

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்:30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள்: 01.04.2022 வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சாத்தூர் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான மண்டல வாரியாக மதிப்பு தொகையை நிர்ணயம் செய்தும்,

பொது சீராய்வுக்குப் பின் (2023-2024 ஆம் ஆண்டு முதல்) உள்ள சொத்துவரி தொகையில் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் ((GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ளவும் 11.04.2022 ஆம் தேதிய 29 ஆம் எண் தீர்மானத்தில் முடிவு செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நகர்மன்ற தீர்மானத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருந்தால் நகராட்சி ஆணையருக்கு 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கலாம் என்ற பொது அறிவிப்பு தினத்தந்தி மற்றும் தீக்கதிர் தமிழ் நாளிதழில் 11.04.2022 ஆம் தேதியிலும், Afternoon என்ற ஆங்கில நாளிதழில் 12.04.2022 ஆம் தேதியிலும் வெளியிடப்பட்டது.

சாத்தூர் நகராட்சியின் பொது அறிவிப்பின் பேரில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினரிடமிருந்து மொத்தம் 126 ஆட்சேபனைகள் வரப்பட்டு, அதனை மன்றத்தில் பதிவு செய்து மேற்குறிப்பிட்ட 11.04.2022 தீர்மானத்தில் நிர்ணயிக்கப்பட்ட திருத்தப்பட்ட சொத்துவரி பொது சீராய்வு அடிப்படை மதிப்பினை கீழ்க்கண்டவாறு உறுதி செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**2022-2023 நிதியாண்டின் முதல் அரையாண்டு முதல் உயர்வு செய்யப்பட்டுள்ள சொத்துவரி பொது சீராய்வு மற்றும் மண்டலம் மதிப்பு விவரம்**

| பரப்பளவு ச.அடி | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டலம் மதிப்பு (ரூ.) | | |
|---|---|---|---|---|
| | | A | B | C |
| **குடியிருப்பு** | | | | |
| 600 சதுர அடி வரை | 1.25 | 2.50 | 1.875 | 1.25 |
| 601-1200 | 1.50 | 3.00 | 2.25 | 1.50 |
| 1201-1800 | 1.75 | 3.50 | 2.625 | 1.75 |
| 1801க்கு மேல் | 2.00 | 4.00 | 3.00 | 2.00 |
| **குடியிருப்பு அல்லாதவை** | | | | |
| கல்வி நிறுவனங்கள் | 1.75 | 5.25 | 3.936 | 3.25 |
| தொழிற்சாலை | 1.75 | 7.00 | 5.25 | 3.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகம் | 2.00 | 12.00 | 9.00 | 6.00 |
| பொது சீராய்வில் நிர்ணயிக்கப்படும் ஆண்டு மதிப்பில் தற்போது அமுலில் உள்ள சொத்துவரி விகிதமான 13% சதவீதம் அரையாண்டு வரியாக நிர்ணயம் செய்யப்படும். | | | | |

## காலிமனை வரி சீராய்வு

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படை மதிப்பு 100% உயர்வு செய்து காலிமனைவரி பொது சீராய்வு செய்யப்படும்.

| மண்டலம் | A | B | C |
|---|---|---|---|
| புதிதாக நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பு | 0.40 பைசா | 0.30 பைசா | 0.20 பைசா |

## தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியினை (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படும்.

அலுவலகக் குறிப்பு :

அ) நகர்மன்றம் ஏற்கனவே உத்தேசித்துள்ள மண்டல அடிப்படை மதிப்பு தொகையை மாற்றி அமைக்க காரணங்கள் எழவில்லை. எனவே, மண்டல அடிப்படை மதிப்பு தொகையை உறுதி செய்யலாம்.

ஆ) பெறப்பட்ட 126 ஆட்சேபனைகளை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.637/2018/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 31, நாள்: 20.052022**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 2</u>

சாத்தூர் நகராட்சியில் **2021–2022–ம்** ஆண்டிற்கு **15–வது** நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிக்குட்பட்ட பிடிஓ காலனி, நென்மேனி ரோடு அண்ணா நகர் மற்றும் வெள்ளக்கரை ரோடு கழிப்பறைகளில் பழுது பார்க்கும் பணி மற்றும் அண்ணா நகரில் புதிய கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்ளுவதற்கு **06.04.2022–ம்** தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் | **–** | மதிப்பீட்டை விட **0.088%** குறைவு |
| **2.** | திரு.பி.சுப்பாராஜ் | **–** | மதிப்பீட்டை விட **0.007%** குறைவு |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.880/2021/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 32, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 3</u>

சாத்தூர் நகராட்சியில் **2022–2023–ம்** ஆண்டிற்கு குடிநீர் வடிகால் நிதியிலிருந்து நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை அடைப்பு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு **08.04.2022–ம்** தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | திரு.எம்.முத்துராமலிங்கம் | **–** | மதிப்பீட்டை விட **0.08%** குறைவு |
| **2.** | திரு.பி.சுப்பாராஜ் | **–** | மதிப்பீட்டை விட **0.12%** அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு..எம்.முத்துராமலிங்கம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.282/2022/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 33, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 4</u>

விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2303/2020/சி3 நாள்:17.12.2020 சாத்தூர் நகராட்சிக்கு 2020–2021–ம் ஆண்டுக்கு சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மதுரை–கன்னியாகுமரி மாநில நெடுஞ்சாலையில் 15 எண்ணம் எல்.இ.டி மின்விளக்குகள் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி உரிய வழிமுறைகளை பின்பற்றி 18.02.2021–ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான ஸ்ரீராமகிருஷ்ண ஏஜென்ஸி திண்டுக்கல் நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.769 நாள்:21.06.2021–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.344/2020/எம்1 நாள்:19.02.2021–ல் 45 தினங்களுக்குள் பணியினை முடிப்பதற்கு உத்திரவு வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்தக்காரர் பணியினை மேற்கொள்ளப்படாமலே உள்ளது. பணியின் முக்கியத்துவம் கருதி பணியினை விரைந்து முடிக்குமாறு பலமுறை தொலைபேசி மற்றும் நேரில் அறிவுறுத்தியும் பணியினை ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்படவில்லை இதனால் இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.344/2020/எம்1 நாள்: 10.12.2021–ல் 10 தினங்களுக்குள் பணியினை முடிக்க தவறும் பட்சத்தில் ஒப்பந்தப்பணி ரத்து செய்யப்படும் என பதிவு அஞ்சல் வழியாக அறிவிப்பு அனுப்பபட்டது அதனை பெற்று கொள்ளாமல் திரும்ப வரப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி ஓராண்டுக்கு மேல் முடிக்கப்படாததால் மாவட்ட ஆட்சியருக்கு பணி முடிவறிக்கை சமர்ப்பிக்க இயலவில்லை. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்ட நிலையில் இந்நகராட்சி பொறியாளர் தமது 22.04.2022–ம் தேதிய அலுவலக குறிப்பில் ஸ்ரீராமகிருஷ்ண ஏஜென்ஸி திண்டுக்கல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

ஓராண்டுக்கு மேல் பணியினை முடிக்கப்படாததால் சட்டமன்ற உறுப்பினர்களின் நோக்கம் மற்றும் பொதுமக்களின் பயனற்று உள்ளது. எனவே நிர்வாக நலன் கருதியும் பொதுமக்களின் அடிப்படை தேவையை கருத்தில் கொண்டு ஸ்ரீராமகிருஷ்ண ஏஜென்ஸி திண்டுக்கல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 344/2020/எம்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 34, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**
**<u>பொருள் எண்: 5</u>**

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டிற்கு 15–வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் நகராட்சி உரக்கிடங்கில் வள மீட்பு மையம் (RRC Centre) அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 19.04.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் | – | மதிப்பீட்டை விட 0.0001% அதிகம் |
| 2. | திரு.பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட 0.002% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஆர்.கே.எஸ்.சிவசங்கரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.880/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 35, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 6</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி மெயின்ரோடு முதல் நகராட்சி மயானம் வரை தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 19.04.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி சீராய்வு குழு முன்னிலையில் சீராய்வு செய்யப்பட்டதில் இரு ஒப்பந்தக்காரருக்கும் தொழில்நுட்ப அனுமதிக்கான அனைத்து தகுதிகளும் உரிய ஆவணங்களும் சமர்ப்பித்துள்ளதால் விலைவிகித ஒப்பந்தபுள்ளியினை 21.04.2022–ம் தேதி ஒப்பந்த சீராய்வு குழு முன்னிலையில் பிரிக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. பாலாஜி கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்தக்காரர், சிவகாசி | – மதிப்பீட்டை விட 0.007% குறைவு |
| 2. | M/s. கிருஷ்ணா & கோ, அருப்புக்கோட்டை | – மதிப்பீட்டை விட 2.85% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. பாலாஜி கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்தக்காரர், சிவகாசி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 05/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 36, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 7</u>

சாத்தூர் நகராட்சி குடிநீர் பணி அடிபம்பு மற்றும் விசைபம்புக்கு தேவையான உதிரி சாமான்களை அரசு நிறுவனமான டான்சியில் வாங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.2,65,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 293/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 37,  நாள்: 20.052022**
**தீர்மானம் :  அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 8</u>**

சாத்தூர் நகராட்சியினால் தினசரி விநியோகம் செய்யப்படும் குடிநீரினை ஒவ்வொரு மாதமும் பகுப்பாய்வு செய்து அதற்கான தரச்சான்று பெறப்பட வேண்டும். 2022—2023—ம் ஆண்டிற்கு குடிநீரினை பகுப்பாய்வு செய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.25,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 567/2021/அ3)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 38,  நாள்: 20.052022**
**தீர்மானம் :  அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 9</u>**

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகள், யூபிஸ்கள் மற்றும் பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 2022—2023 ஆம் ஆண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.75,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1782/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 39,  நாள்: 20.052022**
**தீர்மானம் :  அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 10</u>**

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அறை, ஆணையர் அறை, பொறியாளர் அறை மற்றும் கணினி அறையில் உள்ள ஏசி இயந்திரங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது அதனுடைய செயல்திறன் முற்றிலும் இழந்துவிட்டது. எனவே புதியதாக 4 ஏசி இயந்திரங்கள் 2 டன் கொள்ளளவு மற்றும் அதற்குரிய 5 கேவிஏ கெப்பாசிடர் வாங்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.3,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 328/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 40,  நாள்: 20.052022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 11</u>**

சாத்தூர் நகர்மன்ற கூட்டாய்வில் மன்ற கூட்டத்திற்கு தேவையான 4 எண்ணம் மைக்குகள், ஸ்டாண்ட் மைக்குகள் 6 எண்ணம், ஆம்பிளிபயர் 1, 150 வாட்ஸ் ஸ்பீக்கர் சிஸ்டம் 4 எண்ணம் வாங்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.60,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 296/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 41, நாள்: 20.052022**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 12</u>**

நகராட்சி நிர்வாக துறையின் மானிய கோரிக்கையின் எண்.22 (2022—2023)—ல் சாத்தூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அறிவிக்கையினை நகர்புற உள்ளாட்சி துறை அமைச்சர் மாண்புமிகு.உயர்திரு.கே.என்.நேரு அவர்களால் வெளியிட்டுள்ளார்கள். அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். சாத்தூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடம் மற்றும் அரசு புறம்போக்கு இடம் எதுவும் இல்லை. ஆனால் நகராட்சியின் மையப்பகுதி தனியார் துறைக்கு சொந்தமான ஏழாயிரம்பண்ணை தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழிற்சங்கம் லிமிடெட், வெங்கடாசலபுரம் சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (SIDCO) சொந்தமாக மொத்தம் 2 ஏக்கர் 58 செண்டு காலியிடம் உள்ளது. மேற்கண்ட இடத்தினை நகராட்சி ஆணையர் பெயருக்கு பெறுவதற்கு உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேலே தேர்வு செய்யப்பட்ட இடத்தில் புதிய பேருந்து நிலையத்தினை அமைக்கவும் அதற்கான உரிய திட்ட கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான உரிய திட்ட கருத்துருவினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 288/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 42, நாள்: 20.052022**
**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 13**

சாத்தூர் நகராட்சிக்கு 2021–2022–ம் ஆண்டுக்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நகர்பகுதியில் தேர்வு செய்யப்பட்ட 4 பணிகளை எடுத்து செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அக்வா அரினா எதிரில் உள்ள பெரியார் நகர் பூங்காவில் (95.58mx2.0m) அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் உடற்பயிற்சி உபகரணங்கள் அமைத்தல் மற்றும் பூங்கா மேம்படுத்தப்படுதல் | 11.23 |
| 2. | மேலக்காந்தி நகர் வெள்ளக்கரை சாலையில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் கழிப்பறை மற்றும் நீர்மாலை தொட்டி அமைத்தல் | 1.38 |
| 3. | குருலிங்காபுரம் பூங்காவில் நடைபாதை (95.58mx2.0m) அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் | 10.20 |
| 4. | பெரியார் நகர் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள பூங்காவில் நடைபாதை (95.58mx2.0m) அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் மற்றும் பூங்கா மேம்பாடு செய்தல் | 8.75 |

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வைக்கும் பதிவுக்கும்
(ந.க.எண்.06/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 43, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 14**

சாத்தூர் நகராட்சி பகுதியில் தெருநாய்கள் தொல்லை இருப்பதாக பொதுமக்களிடம் இருந்து புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது. அதன்படி, இந்நகர் பகுதியில் கணக்கெடுப்பு செய்ததில் ஆண் நாய்கள் – **196** எண்ணம், பெண் நாய்கள் – 77, மொத்தம் **– 273** நாய்கள் உள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.181, நாள்:05.04.2013ன்படி விலங்குகள் நலவாரியத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு சிகிச்சை மேற்கொள்ள ஒரு நாய்க்கு ரூ.700/– என அனுமதிக்கப்பட்டுள்ளபடி, நாகர்கோவில் ஜீவகாமுண்டா அனிமல் வெல்பர் சார்பல் டிரஸ்ட் மூலம் இந்நகராட்சி பகுதியில் உள்ள தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள மன்ற அனுமதியும், இதன்பொருட்டு உத்தேச செலவினத் தொகை ரூ.1,95,000/–க்கு மன்ற அனுமதி அளிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 34/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 44, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 15</u>**

இந்நகராட்சி DBC மற்றும் அம்மா உணவத்தில் ஜனவரி **2011** முதல் ஜூன் **2016** வரை பணியாற்றிய பணியாளர்களின் EPF தொகை பிடித்தம் செய்ததினை EPF Organization-ல் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை திரும்ப பெற மேற்படி பணியாற்றிய பணியாளர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. இது சம்பந்தமாக முனிசிப் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதால், நீதிமன்றத்தின் அறிவுரையின்படி, மேற்படி பணியாளர்களை அடையாளம் கண்டு தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக நாளிதழ் விளம்பரம் மற்றும் ஒரு போஸ்டர் அச்சீடு செய்வதற்கும், அதற்கான செலவுத் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அவசர அவசியம் கருதி நாளிளிழ் விளம்பரம் மற்றும் போஸ்டர் அச்சிடுவதற்கும் மன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 320/2013/பி)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 45, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 16</u>**

இந்நகராட்சி பொது பிரிவில் உள்ள குப்பைகளை அள்ளும் பேட்டரி வாகனம் வாங்கப்பட்டு **3** வருடம் ஆகிவிட்டது. தற்போது **5** வண்டிகளுக்கு பேட்டரி காலவதியாகிவிட்டதால் வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே **1** வண்டிக்கு **5** பேட்டரிகள் வீதம் **5** வண்டிக்கு **25** பேட்டரிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கி மாட்டவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2,60,000/–**க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 330/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 46, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 17**

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி நீர்உந்து நிலையத்திற்கு கூடுதல் மின்பளு வேண்டி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதில் அதற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.26,275/—னை செலுத்த கோரப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியம் சாத்தூர் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகையினை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலுத்தியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 290/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 47, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 18**

சாத்தூர் நகராட்சியில் UIDSSMT திட்டத்தின் கீழ் நகர்பகுதி முழுவதும் புதிய பாதாளச் சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இணைப்புகள் வழங்கப்பட்டால் அதற்குரிய இணைப்பு கட்டணம் மற்றும் மாதந்திர கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். மேலும் இத்திட்டத்திற்கு உபவிதிகள், பொதுநிதிகள் மற்றும் 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 138, 142, 147, 148, 149, 306 (5) (பி), 306(6), ஆகிய பிரிவுகளின் படி வீட்டில் சாக்கடைகள் ஏற்படுத்தவும் மற்றும் கழிவுநீர் குழாய்கள், மல அறைகள் முதலிய சுகாதாரத்திற்கு உகந்த மற்ற அமைப்புகளை ஏற்படுத்தவும் வீடுகளுக்கு புதை சாக்கடைத் திட்டத்துடன் இணைப்புகள் கொடுப்பதற்குமான நிபந்தனைகள் மற்றும் உபவிதிகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 253/2006/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 48, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 19**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BJ 4441 வண்டியில் உள்ள ஜெட்ராய்டு மிஷின் பம்ப் சர்வீஸ் செய்து ஆயில் மாற்றி மிஷினில் உள்ள பழுது

மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,61,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 359/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 49, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 20**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BE 5382 வண்டியில் ஜெட்ராய்டு மிஷினுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த பேட்டரி முற்றிலும் செயல் இழந்து விட்டதால் புதிய பேட்டரினை ரூ.7000/—க்கு வாங்கவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 360/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 50, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 21**

சாத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் ஆதாரமான இருக்கண்குடி நீர்தேக்கத்தில் உள்ள சம்பில் உள்ள பைப் லையன்கள் உடைந்து உள்ளதால் நீரினை பம்ப் செய்ய இயலவில்லை. மேலும் அதில் உள்ள 12 எச்.பி 2 மோட்டார்கள் பழுதானது எடுத்து விட்டு வேறு 2 இரண்டு மோட்டார்களை பொருத்தும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.59,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 361/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 51, நாள்: 20.052022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 22**

சாத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள குப்பை அள்ளும் டம்பர் பிளேசர் வாகனம் TN 67AH 6760 பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த வாகனம் 2012—ம் ஆண்டு வாங்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின் படி குப்பை தொட்டிகள் இல்லாத நகராட்சியாக மாற்றும் பொருட்டு மேற்கண்ட வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது குப்பை அள்ள பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி வாகனம் TN 67 Z 4628 30 வருடங்களுக்கு மேலாக வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனுடைய ஆண்டு பராமரிப்பு செலவு அதிகரித்து வருகிறது. மேலும் தகுதி சான்று கட்டணமும் கூடுதலாக உள்ளது. செலவினத்தினை குறைக்கும் பொருட்டு டிப்பர் லாரி வாகனத்தினை கழிவு செய்து விட்டு அதற்கு பதிலாக நிறுத்தி

வைக்கப்பட்டுள்ள டம்பர் பிளேசர் வாகனம் TN 67AH 6760-ல் தொட்டி பொருத்தி டிப்பர் வாகனமாக மாற்றம் செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 362/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 52, நாள்: 20.05.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச. குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**